

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் உள்ள கலைஞர் அவர்களின் சிலைக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப.சரவணன், நகர கழக செயலாளர் ஆ.செந்தில், மாவட்ட துணைச் செயலாளர் க.மதியழகன், மாவட்ட பொருளாளர் எம்.லியாகத் அலி, பொதுக்கமு உறுப்பினர்கள் என்.சாத்தையா, இராசு.சந்தோஷ் மற்றும் மா.மணிவேல், டி. அப்புக்காளை, கி. சுப்பிரமணியன், முரளி ஆகியோர் உள்ளனர்.

கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி

## 'தமிழ்ச்சுரங்கம்' எடுக்கும் முதல் விழா!

### ஏழு நூல்கள் வெளியீடு!

சென்னை, ஜூன் 9 - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பேராசிரியர் ஆறு.அழகப்பன் அவர்களை தலைவராகக் கொண்ட 'தமிழ்ச்சுரங்கம்' எடுக்கும் முதல் விழாவில் பேராசிரியர் ஆறு.அழகப்பன் எழுதிய ஏழு நூல்கள் வெளியீட்டு விழா 11.6.2023 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில் சென்னை அன்பகத்தில் நடைபெற உள்ளது.

அந்நாளில் கலைஞர் தந்த தேன் அமுது, GLORY OF TAMIL, நாடகக்கலை, பெங்களூர் திருவள்ளுவர் சிலை வரலாற்று சுவடுகள், ஆறு.அழகப்பன் 108 போற்றிகள், கலைஞர் அறிந்த நான், ஆறு. அழகப்பன் வரலாற்று சுவடுகள் 100 ஆகிய நூல்களை தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன் தலைமை தாங்கி நூல்களை மதிப்பீடு செய்து உரையாற்றுவார்.

தி.மு.க. செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் வாழ்த்துரை வழங்குவார்.

தகைசால் மாணவர்கள் மூவர் பாராட்டப்படுவர். கோவை செம்மொழி மாநாட்டிற்குக் கலைஞர் எழுதிய செம்மொழிப் பாடல் இன்னிசையாகப் பாடப்படும்.

11.6.2023 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில் சென்னை அன்பகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிக்கு ஒருங்கிணைப்பாளராக தமிழ்ப்பணி ஆசிரியர் வா.மு.சே.திருவள்ளுவர் செயல்பட்டு வருகிறார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா துபாயில் தேரா பகுதியில் அமைந்துள்ள லேண்ட்மார்க் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது. அமீரக திமுக பொறுப்பாளரும், வெளிநாடு வாழ் தமிழர் நலவாரிய உறுப்பினருமான எஸ்.எஸ்.மீரான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வை ஆசிஃப் மீரான் தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியில் அமீரக எழுத்தாளர் குழுமத்த ஜெஸிலாபானு,எகனோமிக் குரூப் சிராஜ், முஸ்தஃபா, செந்தில் பிரபு, இளமுருகன், இர்ஷாத், பருத்தி இக்பால், பாலா, ஜெகபர் அலி அமீரக திமுக நிர்வாகிகளும், கழக உடன் பிறப்புகளும் கலந்து கொண்டனர்.

கடலூர் மாவட்டத்தில்

## சூறைக்காற்றில் வாழை மரங்கள் முறிந்து விழுந்து சேதம்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் ஆய்வு!

கடலூர், ஜூன் 9 - கடலூர் மாவட்டத்தில் 05.06.2023-திங்கள்கிழமை, அன்று சூறைக்காற்றுடன் கூடிய மழை பெய்தது. இதனால்கடலூர்அருகேராமாபுரம், வெள்ளக்கரை, கீரப்பாளையம், வழிசோதனைப்பாளையம், அன்னவல்லி, குள்ளஞ்சாவடி வழுதலம்பட்டு, புலியூர், கோரணப்பட்டு, மதனகோபாலபுரம் மற்றும் கட்டியங்குப்பம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில்விவசாயிகள்பயிரிட்டு இருந்த வாழை மரங்கள் முறிந்தும்,சாய்ந்தும்விழுந்து சேதமடைந்தது. இதனை வேளாண்மை-உழவர்நலத் துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் நேரில் சென்று பார்வையிட்டார்.

பெரும்பாலான வாழைகள் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த போது, முறிந்து விழுந்தன. சில இடங்களில் குலை தள்ளிய பருவத்திலும், சில பகுதிகளில் குலைதள்ளாத வாழைகளும் காற்றின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் சாய்ந்து விழுந்து சேதமடைந்தன. இதை பார்த்த விவசாயிகள் கண்ணீர் விட்டனர்.பாதிக்கப்பட்டதங்களுக்குஏக்கருக்குரூ.1லட்சம் வரை இழப்பீடு வழங்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இதற்கிடையில் வாழை மரங்கள் விழுந்த பகுதிகளான கடலூர் கீரப்பாளையம்,வெள்ளக்கரை,கொடுக்கன்பாளையம், ஒதியடிக்குப்பம்,வழிசோதனைப்பாளையம் ஆகிய பகுதிகளை மாவட்ட ஆட்சியர் அருண் தம்பு ராஜ் முன்னிலையில், 06.06.2023 - செவ்வாய்க்கிழமை, மாலை 4 மணியளவில்வேளாண்மைமற்றும் உழவர் நலத்துறை அமைச்சர்எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் அவர்கள் கீரப்பாளையத்தில் சென்று சேதமடைந்த வாழைகளை பார்வையிட்டபோது,அப்பகுதிவிவசாயிகள் பாதிக்கப்பட்ட மற்றவாழைவயல்களையும் பார்வையிட வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். இதை ஏற்ற அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆட்சியர் அருண்தம்பு ராஜ் ஆகியோர் தனித்தனி இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து , பாதிக்கப்பட்டவயலுக்குசென்றுசேதமடைந்த வாழைகளை பார்வையிட்டுஆய்வுசெய்தனர்.அவர்களுடன்மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ராஜாராம், தோட்டக்கலை துணை இயக்குநர் அருண் உள்ளிட்டோர் உடன்சென்றனர்.

ஆய்வுக்கு பிறகு அமைச்சர்எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் செய்தியாளர்களிடம் கூறியதாவது, கடலூர் மாவட்டத்தில்சூறைக்காற்றுடன் பெய்த மழையால் 2,370 ஏக்கர் (948 ஹெக்டேர்)வாழைகள்சாய்ந்தும், முதிர்ந்தும் சேதமடைந்தும் உள்ளன. இதனால் 1,109 விவசா யிகள் பாதிக்கப்பட்டு உள்ளனர். இவற்றில் தார் தள்ளிய நிலையில் உள்ள மரங்கள், மற்றும் இளம் வாழை கன்றுகளும் சேதமடைந்திருக்கிறது.இது விவ சாயிகளுக்கு பெருத்த நஷ்டத்தைஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது.

சேதமடைந்தபயிர்களை தோட்டக்கலை துறை அதிகாரிகள்,வருவாய்த்துறையினர் இணைந்து கணக்கெடுத்துவருகின்றனர்என்றார். தொடர்ந்து அவர் கூறுகையில், மழை மற்றும் சூறாவளி காற்றால் வாழைகள் சேதமடைந்து உள்ளன. இந்த பாதிப்புவிவரம்குறித்துமுதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, உரிய நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்என்றார்.

இதில்ஒன்றிய கழக செயலாளர்கள் டி.காசி ராஜன், பி.சுப்பிரமணியன், முத்து. பெருமாள், மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, கடலூர்மேயர்சுந்தரிராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், பொதுக்குழு உறுப்பி னர் கே.பி.ஆர்.பால முருகன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

சுற்றுச் சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வை சிறப்பாகச் செயல்படுத்திய

## கொத்தப்புள்ளி ஊராட்சிக்கு பசுமை முதன்மையாளர் விருது!

### அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் வழங்கி ஊராட்சித் தலைவர் வாழ்த்துப் பெற்றார்!

சின்னாளபட்டி, ஜூன் 9 - உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வை சிறப்பாக செயல்படுத்திய கொத்தப்புள்ளி ஊராட்சிக்கு பசுமை முதன்மையாளர் விருதினை மாவட்ட ஆட்சியர் பூங்கொடி வழங்கினார் ஊரகவளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் கொத்தப்புள்ளி ஊராட்சிமன்ற தலைவர் சுந்தரி அன்பரசு விருதை கொடுத்து வாழ்த்துப் பெற்றார்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் கொத்தப்புள்ளி ஊராட்சிமன்ற தலைவராக இருப்பவர் சுந்தரி அன்பரசு இவரும் ஊராட்சிமன்ற துணைத்தலைவர் எம்.வி.ரெங்கசாமி மற்றும் ஊராட்சி செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் கொத்தப்புள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட கிராமங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வந்தனர். உலக சுற்றுசூழல் தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கொத்தப்புள்ளி ஊராட்சிக்கு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பாக மாவட்ட அளவிலான பசுமை முதன்மையாளர் விருதினை மாவட்ட ஆட்சியர் பூங்கொடி ஊராட்சிமன்ற தலைவர் சுந்தரி அன்பரசிடம் வழங்கினார். நிகழ்ச்சியின் போது மாவட்ட வருவாய் அலுவலர் சே.ஹ. சேக்முகைதீன் மகளிர், மாவட்ட திட்ட இயக்குநர் திலகவதி மகளிர் திட்ட இயக்குநர் சரவணன், மாசு கட்டுப்பாட்டு வாரிய பொறியாளர் மணிமாறன் ஆகியோர் உடனிருந்தனர்.

பசுமை முதன்மையாளர் விருதினை பெற்ற ஊராட்சிமன்ற தலைவர் சுந்தரி அன்பரசு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் விருதினை கொடுத்து வாழ்த்து பெற்றார். அவரை வாழ்த்தி பேசிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி இதுபோல பல்வேறு விருதுகளை பெற ஊராட்சி நிர்வாகம் மக்களுக்கான நலப்பணிகளை முனைப்போடு செயல்படுத்த வேண்டுமென வாழ்த்தினார். நிகழ்ச்சியின் போது தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இரா. தண்டபானி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, கிழக்கு மாவட்ட திமுக துணைச் செயலாளர் நாகராஜன், கொத்தப்புள்ளி ஊராட்சி மன்ற துணைத்தலைவர் எம்.வி.ரெங்கசாமி, வார்டு உறுப்பினர் நாகவள்ளி ஆறுமுகம், ஊராட்சி செயலாளர் செந்தில்குமார் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

பா.ஜ.க. எம்.பி. மீது பாலியல் குற்றச் சாட்டு!

## மல்யுத்த வீராங்கனைகளுடன் ஒன்றிய அமைச்சர் பேச்சுவார்த்தை!

### பிரிஜ்பூஷன் எம்.பி.யை உடனே கைது செய்ய வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூன் 9 - பா.ஜனதா எம்.பி.யும், இந்தியமல்யுத்தசம்மேளன தலைவருமானபிரிஜ்பூஷன் சரண்சிங் மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு உள்ளது.

ஒரு மைனர் உள்பட 7 வீராங்கனைகள் பிரிஜ் பூஷன் சிங் மீது பாலியல் புகார் கூறியுள்ளனர். அவர் பதவி விலக வேண்டும், டெல்லி போலீசார் அவரை கைது செய்ய வேண்டும் என்று மல்யுத்த வீரர், வீராங்கனைகள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஒலிம்பிக்பதக்கம்வென்ற பஜ்ரங்புனியா,சாக்ஷிமாலிக் மற்றும் வினிஷ் போகத் உள்ளிட்ட நட்சத்திரங்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.அவர்களின் தொடர் போராட்டம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த போராட்டம் காரணமாக பிரிஜ்பூஷன் மீது 2 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆனால் இதுவரை அவர் கைது செய்யப்படவில்லை. அவர் மீதான இரண்டு வழக்குகளில் ஒன்று போக்சோ சட்ட வழக்காகும்.

இதற்கிடையே மல்யுத்த வீரர், வீராங்கனைகள் ஒன்றிய அமைச்சர் மந்திரி அமித் ஷாவை சந்தித்தனர். இதன் பிறகு பிரிஜ்பூஷன் சிங்கின் வீட்டில் டெல்லி போலீசார் விசாரணை நடத்தினர். அவரது உதவியாளர்கள், பணியாளர்கள் என 12 பேரிடம் போலீசார் வாக்குமூலம் பெற்றனர்.

இந்நிலையில் மல்யுத்த வீராங்கனையுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒன்றிய அரசு அழைப்புவிடுத்துஉள்ளது. இதுதொடர்பாக ஒன்றிய விளையாட்டுத் துறை அமைச்சர்அனுராக்தாக்கூர் நேற்றிரவு வெளியிட்ட டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

மல்யுத்த வீராங்கனைகளின் பிரச்சினைகள் குறித்துஅவர்களிடம்பேச்சுவார்த்தைநடத்த அரசுதயாராகஉள்ளது. நான்மீண்டும் அவர்களுக்கு இது தொடர்பாகஅழைப்புவிடுக்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ஒன்றிய அரசின் இந்த அழைப்பு தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் சாக்ஷி மாலிக் கூறும் போது " ஒன்றிய அரசின் பேச்சுவார்த்தை குறித்து ஆலோசனைக்கு பிறகு முடிவு செய்யப்படும். தங்கள் தரப்பில் அனைவருக்கும் சம்மதம் என்றால் மட்டுமே பேச்சுவார்த்தைக்கு ஒப்புக் கொள்வோம்" என்றார்.

இதற்கிடையே ஒன்றிய அரசின் அழைப்பை தொடர்ந்துபஜ்ரங் புனியா, சாக்ஷிமாலிக்ஆகியோர்ஒன்றிய விளையாட்டுத் துறை அமைச்சர்அனுராக்தாக்கூர் வீட்டுக்கு சென்று பேச்சுவார்த்தையில்ஈடுபட்டனர். விவசாய சங்க தலைவர் ராகேஷ் திகாயத்தும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டார்.

பிரிஜ்பூஷன் சிங்கை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று மல்யுத்த வீரர், வீராங்கனைகள் அனுராக் தாக்கூரிடம் வலியுறுத்தினார்கள்.

திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## கலைஞர் நூற்றாண்டு தெருமுனை தொடர் கூட்டங்கள்!

### மாவட்டச்செயலாளர் க.செல்வராஜ்எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தெருமுனைக் கூட்டம் திருப்பூர் வடக்கு மாவட்டம் திருப்பூர் தெற்கு மாநகரம் நல்ல பகுதி கழகத்தின் சார்பில் பகுதி கழக செயலாளர் மேங்கோ அ.பழனிசாமி தலைமையில் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தெற்கு (சட்டமன்ற உறுப்பினர் கா.செல்வராஜ்) மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், திருப்பூர் தெற்கு மாநகராட்சி மேயர் நா.தினேஷ்குமார் (திருப்பூர் வடக்கு) ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

| | | | | |
|---|---|---|---|---|
| 09.6.2023 | மாலை 6.30 மணி | 48 வது | நல்லூர் | பவானி கண்ணன் |
| வெள்ளிக்கிழமை | மாலை 7.30 மணி | வட்டம் | ராக்கியாபாளையம் பிரிவு | தலைமை கழக பேச்சாளர் |
| 10.06.2023 | மாலை 6.30 மணி | 47 வது | முதலிபாளையம் | கந்தலி கரிகாலன் |
| சனிக்கிழமை | | வட்டம் | பிரிவு | தலைமைக் கழக பேச்சாளர் |
| 11.06.2023 | மாலை 6.30 மணி | 46 வது | காசிபாளையம் | ஈரோடு இளையகோபா |
| ஞாற்றுக்கிழமை | மாலை 7.30 மணி | வட்டம் | மணியக்காரம்பாளையம் | தலைமை கழக பேச்சாளர் |
| 12.06.2023 | | 49 வது | வள்ளியம்மை நகர் | திருப்பூர் கூத்தரசன் |
| திங்கட்கிழமை | | வட்டம் | (காமதேனு பேக்கரி அருகில்) | தலைமை கழக பேச்சாளர் |
| | | | சுப்பிரமணியா நகர் | |

இந்த தெருமுனைப் பிரச்சார கூட்டத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், இந்நாள் முன்னாள் மாவட்ட பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, தொழிலாளர் அணி, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, இலக்கிய அணி, மீனவர் அணி, நெசவாளர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, வர்த்தகர் அணி, சிறுபான்மை நலஉரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல் வீரர்கள் ஒன்று சேர்ந்து பொது மக்களும் கலந்து கொள்ளும் வகையில் வழி வகை செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**க.செல்வராஜ். எம்.எல்.ஏ.**

செயலாளர், திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க.

## பிபோர்ஜாய் புயல் வடக்கு நோக்கி நகர்கிறது!

### கேரளா முதல் மராட்டியம் வரை கனமழைக்கு வாய்ப்பு!

புதுடெல்லி, ஜூன் 9 - இந்தியாவில் தென் மேற்கு பருவ மழை தாமதமான நிலையில் இப்போது அரபிக்கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது.

தென்கிழக்கு அரபி கடலில் மையம் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை இப்போது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவெடுத்து புயலாக மாறியுள்ளது. இந்த புயலுக்கு பிபோர்ஜாய் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த பெயரை வங்கதேச மாநிலம் வழங்கி உள்ளது. பிபோர்ஜாய் என்றால் பேராபத்து என்று பொருள்.

தற்போது அரபிக்கடலில் உருவாகி உள்ள பிபோர்ஜாய் புயலானது வடக்கு நோக்கி நகர வாய்ப்பு உள்ளது என்று கூறப்பட்டது. அதன்படி இந்த புயல் அடுத்த 6 மணி நேரத்தில் தீவிரமடைந்து வலுவானதாக உருமாறும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது.

மேலும் இந்த புயல் கிழக்கு மத்திய மற்றும் அதை யொட்டிய தென்கிழக்கு அரபி கடலில் கோவாவுக்கு மேற்கு, தென்மேற்கே 920 கிலோ மீட்டர் தொலைவிலும், மும்பைக்கு தென் மேற்கே 1050 கிலோ மீட்டர் தொலைவிலும், போர்பந்தரில் இருந்து தென்தென் மேற்கே 1130 கிலோ மீட்டர் தொலைவிலும் போர்பந்தருக்கு தெற்கில் 1430 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலை கொண்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தில் பிபோர்ஜாய் புயலானது வடக்கு நோக்கி நகர்ந்து படிப்படியாக தீவிரம் அடைந்து கிழக்கு மத்திய அரபி கடலில் தீவிர புயலாக மாற வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.

மயிலாடுதுறை மாவட்டம் - தலைமைச் செயற்குழு உறுப்பினர்

## இராம.இளங்கோவன் இல்ல திருமண வரவேற்பு விழா!

### எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் - பி.கே.சேகர்பாபு - சிவ.வீ.மெய்யநாதன் - எஸ்.எஸ்.சிவசங்கர் - நிவேதா முருகன் வாழ்த்துரை!

நாகை, ஜூன் 9 - மயிலாடுதுறை மாவட்டக் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் இராம.இளங்கோவன் மகன் இள.பவித்திரன் - கிருஷ்ணவேணி ஆகியோரது திருமண வரவேற்பு விழா வரும் 11ம் தேதி மாலை வைத்தீஸ்வரன் கோயிலை அடுத்த பெருமங்கலத்தில் நடைபெறுகிறது.

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுகா பெருமங்கலம் நடுத்தெருவை சேர்ந்த தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் இராம.இளங்கோவன் - இராதிகா இணையரின் மகன் இள.பவித்திரனுக்கும், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் குன்றக்குடியைச் சேர்ந்த கல்லல் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் ஆர். ஜி.சுப்பரமணியன்-லதா இணையரின் மகள் சு. கிருஷ்ணவேணிக்கும் திருமணம் கடந்த 25.5.2023 தேதி அன்று சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இதையடுத்து திருமண வரவேற்பு விழா வரும் 11.6.2023 ஞாயிற்றுகிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி தாலுகா வைத்தீஸ்வரன்கோயிலை அடுத்த பெருமங்கலத்தில் நடைபெறுகிறது.

திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் கே.பால கிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்,

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என். கௌதமன், டாக்டர் ஜெய.ராமமூர்த்தி, கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், தஞ்சாவூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராம லிங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நாகை நடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மயிலாடுதுறை சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.இராஜ்குமார், கும்பகோணம் சட்ட மன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன்,

மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர். அருள்செல்வம், மிாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், மாநில மீனவர் அணிதுணைச் செயலாளர் ஜி.மனோகரன், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, மாநிலா விவசாய அணி துணைத் தலைவர் ஜித்து (எ) எஸ்.ராஜரத்தினம், கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைத் தலைவர் ஜெக. வீரபாண்டியன், கும்பகோணம் துணை மேயர் சு.ப.தமிழழகன், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர்,

சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்திய சீலன், அ.அசோகன், எம். பன்னீர்செல்வம், டி. மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், ப.கோவிந்தராசன், க.ராஜேந்திரன், இல.மேகநாதன், கோவி. அன்பரசு,, ஜி.என்.ரவி, கிள்ளை க.ரவிந்திரன், மயிலாடுதுறை மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், நாகை மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம்,

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஏ.ஜி.ஜெ.பிரபாகர், மூவலூர் எம்.மூர்த்தி, செல்ல.சேது.ரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், என்.இளையபெருமாள், மங்கை எம்.சங்கர், ஞான. இமையநாதன், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், பி.முருகமணி, பஞ்சு குமார், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, வே.மனோகர், அமுர்த.விஜயகுமார், கோ.க.அண்ணாதுரை, செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், க.பழனியப்பன், மகா. குமார்,

ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், சோ.பா.மலர்வண்ணன், ஆர்.உதயச்சந்திரன், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், இரா.மாரிமுத்து, எம்.ஆர்.செந்தில்குமார்,

பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.அன்புச்செழியன், எம்.சம்சுதீன், எஸ். கே.முத்துராஜா, என்.அண்ணாதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.வெற்றிவேல், எல்.எஸ்.ஈ.பழனியப்பன், ஜெ.கபீலன், சி.சுவாமிநாதன், நத்தம் ஏ.வின்சென்ட், பி.சிவதாஸ், ஹர்ஷத், எஸ்.சங்கர நாராயணன், அ.காந்தி, பி.கென்னடி, சுபா.நெடுஞ்செழியன் மற்றும் ஒன்றியக் குழு தலைவர்கள், நகர் மன்ற தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், மாவட்ட சாபு அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாசி அமைப்பு பிரதி நிதிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.